# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 13201/SCIC/2023**

திருமதி N. கலாவதி ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
ஓமலூர், சேலம் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கு ஏற்கனவே 05.05.2025 அன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

- **ஓமலூர் சார்பதிவாளரால் மாவட்ட பதிவாளர், சேலம் (மேற்கு) என்ற முகவரியிட்டு 22.02.2022 தேதியிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தில் ஓமலூர் சார்பதிவாளர் பாகபாத்திய விடுதலை ஆவணம் 24.12.2021 அன்று ஈஸ்வரி என்பவரால் தாக்கல்**

**செய்யப்பட்டதாகவும், ஆவணம் பரிசீலனை வேண்டி நிலுவையாக வைக்கப்பட்டதாகவும், தற்போது ஆவணம் நிலுவையிலிருந்து விடுவிக்கும் நிகழ்வின் போது திரும்ப வழங்குதல் என்ற முறை தவறுதலாக தேர்வு செய்யப்பட்டதால் (DO YOU WANT TO RETURN THE DOCUMENT WITHOUT REGISTERATION - YES) ஆவணம் நிலுவையிலிருந்து விடுவிக்கப்பட்டு பதிவு செய்வதற்கு இயலவில்லையென்றும், TCS நிறுவனத்தாரிடம் SUPPORT REQUEST பதிவு செய்து குறையை சரிசெய்து தரும்படி கோரப்பட்டதாகவும், மாவட்ட பதிவாளர் ஆணையுடன் மீள சமர்ப்பிக்கும்படி தெரிவிக்கப்பட்டதால், மேற்படி ஓமலூர் சார்பதிவக நிலுவை ஆவண எண்.P62/2021 SR - LOGINலிருந்து விடுவித்து ஆவணப்பதிவு மேற்கொள்ள வழிவகை செய்து ஆணை வழங்கும்படி கோரப்பட்டுள்ளது. ஆனால் அக்கடிதத்திற்கு மாவட்ட பதிவாளரிடமிருந்து பதில் கடிதம் ஏதேனும் பெறப்பட்டதா என்பது குறித்து பொதுத் தகவல் அலுவலரால் எந்தவித தகவலையும் ஆணையத்தின் முன் சமர்ப்பிக்க இயலவில்லை.**

- **மேற்குறிப்பிடப்பட்ட பொருள் தொடர்பாக சேலம் (மேற்கு) மாவட்ட பதிவாளரிடம் விசாரணை மேற்கொள்வது அவசியமாகிறது என்று ஆணையத்தால் கருதப்பட்டு, இவ்வழக்கானது பிறிதொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. ஆணையத்தின் அடுத்த விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரர், ஓமலூர் சார்பதிவாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் சேலம் (மேற்கு) மாவட்ட பதிவாளர் ஆகியோர்களுக்கு ஆணையத்திலிருந்து விசாரணை அழைப்பாணைகள் அனுப்பப்படவேண்டும்.**

2. அதனடிப்படையில் இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு வே. செந்தில்குமார், மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், சேலம் (மேற்கு) மற்றும் திரு ஞா. அசோக்குமார், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், ஓமலூர், சேலம் மாவட்டம் ஆகியோர் நேரில் ஆஜரானார்கள்.

4. மாவட்ட பதிவாளர், சேலம் (மேற்கு) அவர்கள் 22.02.2022 தேதியிட்டு சார்பதிவாளரிடமிருந்து எந்தவொரு கடிதமும் தனக்கு வரப்பெறவில்லையென்று தெரிவித்தார். சார்பதிவாளரும் மேற்படி கடிதமானது மாவட்ட பதிவாளருக்கு

அனுப்பப்பட்டதற்கான அஞ்சல் ஆதாரம் ஏதும் தங்கள் அலுவலகத்தில் இல்லையென்றும் தெரிவித்தார்.

5. **மேலும், மனுதாரர் குறிப்பிடும் நிகழ்வு தொடர்பாக அப்போது சார்பதிவாளராக பணிபுரிந்து திரு சுப்பிரமணியன் என்பவரால் 16.08.2022 தேதியிட்டு "Resolved" என்று கோப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் விசாரணையின்போது தெரிவித்து, அதன் நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அப்போதைய சார்பதிவாளர் திரு சுப்பிரமணியன், என்பவரால் மாவட்ட பதிவாளர் (மேற்கு) அவர்களிடமிருந்து எந்தவித ஆணையும் பெறப்படாமல் "Resolved" என்று கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது தெளிவாகிறது. மேலும் இதுகுறித்து எந்தவித தகவலும் மனுதாரரால் அறியப்படவில்லை.**

**6. எனவே, இந்நிகழ்வு குறித்து துணைப்பதிவுத்துறைத்தலைவர், சேலம் அவர்கள் நேரடியாக விசாரணை மேற்கொண்டு, அதுகுறித்த அறிக்கையினை 17.07.2025 பிற்பகல் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ.்.தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13201/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

துணைப்பதிவுத்துறைத்தலைவர்,
துணைப்பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சேலம்.

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
ஓமலூர், சேலம் மாவட்டம்.

மாவட்ட பதிவாளர்,
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
சேலம் (மேற்கு).

**<u>மனுதாரர்:-</u>**
Tmt N. Kalavathi,
1647, Vijayanagar 1st Cross,
Bangarpet, Karnataka 563 114

Copy to: File TK/PS